# புதுச்சேரியில் துய்ப்ளேவின் உருவச்சிலை

கலைகளைப் போற்றுவோம்
**கலை ஒரு மனிதனின் படைப்பகள் அல்ல**
**அவை ஒரு மன்னனின் படைப்புகள்**

**கி.ஆ.பாபு,** உதவி பேராசிரியர்,
கலை வரலாற்றுத் துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.



**முன்னுரை**

மனித வாழ்க்கை வரலாற்றில் எண்ணற்ற மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே வருகின்றன. அவற்றின் காலத்திற்கேற்ப அம்மனிதனே பதிவு செய்கின்றான். மனிதன் தோன்றிய காலம் தொட்டு நடந்த நிகழ்வுகளையும், அக்காலச் சூழ்நிலைகளையும் மக்களின் பழக்க வழக்கங்களையும் நாகரீகத்தையும் பண்பாட்டையும் அறியக் கலைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவே தான் கற்கால மனிதன் முதற்கொண்டு தற்கால மனிதன் வரையிலான வரலாற்றை நாம் ஒரு சிறிய சிற்பத்தைக் கொண்டோ ஓவியங்களைக் கொண்டோ அறிகிறோம், அறிய முயல்கிறோம்.

இந்தியா பல நாட்டவர்களால் பல காலக் கட்டங்களில் ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது. நாட்டினை ஆண்ட அந்நியர்கள் தாங்கள் வந்ததனை நினைவு கூரும்பொருட்டும் தங்கள் தலைவர்களை நினைவு கூரும் பொருட்டும் பல சிலைகள்ளை முக்கிய இடங்களில் நிறுவியுள்ளனர். இவ்வாறு பிரெஞ்சியர் ஆண்ட பகுதியான புதுச்சேரியிலும் வரலாற்று நிகழ்வுகளை நினைவினைக்கூறும் நினைவுச்சிற்பங்கள் அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் நிறுவப்பட்டுள்ளன.

**புதுச்சேரியில் உள்ள துய்ப்ளேவின் உருவச்சிலை**

இந்தியாவில் பிரெஞ்சியர்களின் பலத்தையும் ஆதிக்கத்தையும் நிலைநாட்டிப் பிரெஞ்சிந்தியாவின் உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றியவர் துய்ப்ளே என்றழைக்கப்படும் ஜோசப் பிரான்சுவா துய்ப்ளே ஆவார். இவர் பிரான்சில் நோர்டு எனும் பகுதியின் தலைமைத்தளமான **லாந்த்ரேசி** என்ற நகரில் 1697–ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள் பிறந்தார். இவருடைய ஆட்சியில் புதுச்சேரி பல வரலாற்று நிகழ்வுகளைக் கண்டது.

துய்ப்ளேவின் நினைவினைப் போற்றும் வகையில் பிரெஞ்சு அரசு அவர் இறந்த ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு அதாவது 1870–இல் அவருடைய உருவச்சிலைகளைப் பிரான்சிலும் பிரெஞ்சிந்தியாவின் தலைமையிடமான புதுச்சேரியிலும் நிருவியது.

**துய்ப்ளே சிலையின் சிறப்பம்சங்கள்**

துய்ப்ளேவின் சிலை தியோடொரெ குரேர் என்ற சிற்பியால் 1869–இல் செய்யப்பட்டுப் புதுச்சேரியில் ஜூலை 16, 1870–ல் நிருவப்பட்டது. வெண்கல உலோகத்தால் செய்யப்பட்ட இச்சிலையின் உயரம் 2.88 மீட்டர் ஆகும். இச்சிலை முதன் முதலாகக் கடற்கரையில் எதிர்ப்புறத்தில் பாரதி பூங்காவிற்கு